2022 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***3612—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் ஐந்து முறை முதலமைச்சராகப் பதவி வகித்து முத்திரை பதித்த முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வெற்றி பெறச் செய்து, முதன்முதலாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பி வைத்த குளித்தலை தொகுதிக்கு சார் பதிவாளர் அலுவலகம் கட்டுவது குறித்து வினா அமைந்தது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது. தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கரூர் பதிவு மாவட்டத்தில் உள்ள குளித்தலை சார் பதிவாளர் அலுவலகம் கடந்த 1865 ஆம் ஆண்டு முதல் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்த காரணத்தால், சார் பதிவாளர் அலுவலகம் அங்கிருந்து மாற்றப்பட்டு, 16–4–2018 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலன் காக்கும் அரசால் குளித்தலை சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் இந்த ஆண்டில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதல் தொகுதி, குளித்தலை தொகுதி மக்களின் சார்பில் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குளித்தலை தொகுதிக்கு புதிய சார்பதிவாளர் அலுவலகம் கட்டப்படும் என்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, இந்தத் தொகுதி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு செய்தியை இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டும். 2006–2011 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். சட்டமன்றப் பேரவையில் நான் வைத்த கோரிக்கையினையேற்று குளித்தலை வட்டாட்சியர் அலுவலகம், குளித்தலை காவல் நிலையம், ஒருங்கிணைந்த நீதிமன்றம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர், தளபதியார் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் குளித்தலைக்கு சார் பதிவாளர் அலுவலகம் கட்டித் தரப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.

2022 ஜனவரி 7]

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், திருப்பூண்டி சார் பதிவாளர் அலுவலகம் 138 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தை திருப்பூண்டியிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது பொது மக்களிடத்திலே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது; போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கை அரசின் பரிசீலினையில் உள்ளதா, அப்படியிருப்பின் இதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமை வாய்ந்த பத்திரப் பதிவு அலுவலகத்தை மாற்றக்கூடிய கருத்து அரசுக்கு இல்லை. அதேநேரத்தில் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து பத்திரப் பதிவு அலுவலகங்களையும் மக்களுடைய பயன்பாட்டிற்கு வசதியாக, அந்தத் தாலுகாவிற்கு உட்பட்டு, பதிவினுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆங்காங்கே புதிதாகப் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்கப்பட இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

புதிய சார் கருவூலம்

***703—டாக்டர் சி. சரஸ்வதி:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி வட்டத்தில் புதிய சார் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?